# பிப்டிக்கில் 'ஸ்வைப்பிங்' மூலம் பணப்பரிவர்த்தனை

■ புதுச்சேரி

புதுச்சேரி பிப்டிக்கில் 'ஸ்வைப் பிங்' இயந்திரம் மூலம் பணப் பரிவர்த்தனை தொடங்கப் பட்டுள்ளது.

புதுச்சேரி அரசு சார் நிறுவன மான பிப்டிக்கில் ரொக்க பரிவர்த் தனைகளை குறைப்பதற்காக கனரா வங்கி உதவியுடன் 'ஸ்வைப்பிங்' இயந்திரம் மூலம் பண பரிவர்த்தனை செய்யும் முறைப் நேற்று அறிமுகம் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பிப்டிக் தலைவர் சிவா எம்எல்ஏ பங்கேற்று, பண அட்டைகளை பயன்படுத்தும் கருவிகளை அதிகாரிகளுக்கு வழங்கி, அறிமுகம் செய்து வைத்தார். இதன் மூலம் தொழில் முனைவோர் பிப்டிக் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தவணைத் தொகை, தண்ணீர் வரி, வாடகை உள்ளிட்ட அனைத்து சேவைகளுக்கான தொகைகளை தங்களது பண அட்டைகள் மூலம் செலுத்தலாம்.



▲ புதுச்சேரி அரசு சார் நிறுவனமான பிப்டிக்கில் 'ஸ்வைப்பிங்' இயந்திரம் மூலம் பணம் செலுத்தும் முறையை பிப்டிக் சேர்மன் சிவா எம்எல்ஏ தொடங்கி வைத்தார்.

CH-PY

ஆகியவைதான் காங்., பட்

# பிப்டிக் நிறுவனத்தில் புதிய வசதி அறிமுகம்



ஸ்வைப்பிங் கருவி மூலமாக பணம் பரிவர்த்தனை செய்யும் வசதியை, பிப்டிக் சேர்மன் சிவா எம்.எல்.ஏ., நேற்று அறிமுகம் செய்து வைத்தார். அருகில், மேலாண் இயக்குனர் சத்தியமூர்த்தி

**புதுச்சேரி, மார்ச் 3**

பிப்டிக் நிறுவனத்தில் ஸ்வைப்பிங் இயந்திரம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்யும் வசதியை, பிப்டிக் சேர்மன் சிவா எம்.எல்.ஏ., நேற்று அறிமுகம் செய்து வைத்தார்.

பிப்டிக் நிறுவனத்தில் ரொக்கப் பரிவர்த்தனைகளை குறைப்பதற்காக, கனரா வங்கி உதவியுடன் ஸ்வைப்பிங் இயந்திரம் மூலமாக பண பரிவர்த்தனை செய்யும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பிப்டிக் வளாகத்தில் நேற்று நடந்த நிகழ்ச்சியில், பிப்டிக் சேர்மன் சிவா எம்.எல்.ஏ., ஸ்வைப்பிங் கருவிகளை அதிகாரிகளுக்கு வழங்கி, புதிய வசதியை அறிமுகம் செய்து வைத்தார்.

இதன்மூலம், தொழில் முனைவோர் பிப்டிக் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன், தண்ணீர் வரி, வாடகை உள்ளிட்ட அனைத்து சேவைகளுக்கான தொகைகளையும் தங்களது பண அட்டைகள் மூலம் செலுத்த முடியும்.

நிகழ்ச்சியில், பிப்டிக் மேலாண் இயக்குனர் சத்தியமூர்த்தி, பொது மேலாளர் சுரேஷ்ராஜ், கனரா வங்கி முதன்மை மேலாளர் மனோகரன் மற்றும் பிப்டிக் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



*பண அட்டைகள் பணம் செலுத்திடும் வசதியை பிப்டிக் தலைவர் சிவா எம்.எல்.ஏ. தொடங்கி வைத்த காட்சி.*

### பிப்டிக் நிறுவனத்தில்

# பண அட்டைகள் மூலம் பணம் செலுத்திடும் வசதி

## சிவா எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, மார்ச்.2–

பிப்டிக் நிறுவனத்தில் இனி வரும் காலங்களில் ரொக்க பரிவர்த்தனைகளை குறைப்பதற்காக கனரா வங்கியின் சார்பில் பண அட்டைகள் மூலம் பணம் செலுத்திட வசதி செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடக்க விழா இன்று நடந்தது. விழாவில் பிப்டிக் வாரிய தலைவர் சிவா எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பண அட்டைகளை பயன்படுத்தும் கருவிகளை பிப்டிக் அலுவலக ஊழியர்களிடம் ஒப்படைத்து தொடங்கி வைத்தார்.

அப்போது இனி வரும் காலங்களில் ரொக்க பரிவர்த்தனைகளை தவிர்த்து பண அட்டைகள் மூலம் பிப்டிக் நிறுவனத்துக்கு வரவேண்டிய தொகைகளை வசூலிக்குமாறு சிவா எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டார்.

மேலும் இதன் மூலம் தொழில் முனைவோருக்கும், தொழில் நிறுவனங்களும் பிப்டிக் நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய கடனை திருப்பி அளிப்பு, தண்ணீர் வரி, வாடகை மற்றும் அனைத்து சேவைகளுக்கான தொகைகளையும் தத்தமது பண அட்டைகள் மூலம் செலுத்திட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விழாவில் நிர்வாக இயக்குனர் சத்தியமூர்த்தி, பொதுமேலாளர் சுரேஷ்ராஜ், கனரா வங்கி முதன்மை மேலாளர் மனோகரன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.